


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 326 | 4 Pages | 21.6.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 326 | 4 பக்கங்கள் | 21.6.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**

**பிறவினை எல்லாந் தரும்**

**விளக்கம்:**

அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.

# சாலை விபத்தில் உயிரிழந்த முசிறி வருவாய் கோட்டாட்சியரின் குடும்பத்துக்கு நிதியுதவி: முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை ஜூன் 21

கரூர் திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கடியாக்குறிச்சி கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த முசிறி வருவாய் கோட்டாட்சியர் ஆரமுத தேவசேனாவின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேக்குடி கிராமம், கரூர்திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கடியாக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் முசிறி வருவாய் கோட்டாட்சியர் ஆரமுத தேவசேனா இன்று காலை 11.45 மணியளவில் TN 45 G 1798 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, எதிரே திருச்சியிலிருந்து திருப்பூர் நோக்கி சென்றுகொண்டிருந்த அரசுப்பேருந்து மோதியதில் முசிறி வருவாய் கோட்டாட்சியரின் நான்கு சக்கர வாகனம் நிலைதடுமாறி அருகில் பழுது பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்த ஜேசிபி வாகனம் மீது எதிர்பாதாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானதில் முசிறி வருவாய் கோட்டாட்சியர் ஆரமுத தேவசேனா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

முசிறி வருவாய் கோட்டாட்சியர் ஆரமுத தேவசேனாவின் உயிரிழப்பு வருவாய்த் துறைக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ஆரமுத தேவசேனாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள்






மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரமுத தேவசேனாவின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்த அரசு அலுவலர்களுக்கான காப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு கோடி பெற்று வழங்கப்படும். மேலும், அவரது குடும்பத்தினருக்கு முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபாய் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெங்களூரு கூட்ட நெரிசலில் 11 பேர் பலியான விவகாரம்: மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல்



பெங்களூரு, ஜூன் 21

பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் ஸ்டேடியத்தில் கடந்த 4ந் தேதி ஆர்.சி.பி. அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியானார்கள். இந்த விவகாரத்தில் பெங்களூரு போலீஸ் கமிஷனராக இருந்த தயானந்த், கூடுதல் போலீஸ் கமிஷனராக இருந்த விகாஸ்குமார், துணை போலீஸ் கமிஷனராக பணியாற்றிய சேகர் ஆகிய 3 ஐ.பி.எஸ். அதிகாரிகளையும் கர்நாடக அரசு பணியிடை நீக்கம் செய்திருந்தது.

இதுபற்றி மத்திய அரசுக்கு, கர்நாடக அரசு சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது. பொதுவாக ஐ.பி.எஸ். அதிகாரிகளின் பணியிடை நீக்கம் குறித்து மாநில அரசால், மத்திய அரசுக்கு 15 நாட்களில் முறைப்படி அறிக்கை வழங்க வேண்டும். ஆனால் கர்நாடக அரசு சார்பில் அந்த அறிக்கை வழங்கப்படாமல் இருந்தது.

தற்போது 3 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிடை நீக்கம் குறித்த அறிக்கை விரிவாக தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கை இன்று (வெள்ளிக்கிழமை) மத்திய அரசிடம், கர்நாடகம் சார்பில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

அந்த அறிக்கையை மத்திய அரசு பரிசீலனை நடத்தி பணியிடை நீக்கத்தை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? என்பது குறித்து முடிவு எடுக்கும் என்று கூறப்படுகிறது.

## நீதிபதி யஷ்வந்த் வர்மாவை நீக்க வேண்டும்.. விசாரணை குழு பரிந்துரை



புதுடெல்லி, ஜூன் 21

அலகாபாத் ஐகோர்ட்டு நீதிபதியாக உள்ள யஷ்வந்த் வர்மா, இதற்கு முன்பு, டெல்லிஐகோர்ட்டுநீதிபதியாகஇருந்தார். அப்போது, கடந்த மார்ச் 14ந் தேதி இரவு, டெல்லியில் உள்ள அவரது வீட்டில் தீவிபத்துஏற்பட்டது.பழையபொருட்கள் வைக்கும் ஒரு அறையில், பாதி எரிந்த நிலையில் கோடிக்கணக்கான ரூபாய் பணம் சிக்கியது.


இதுபற்றி விசாரிக்க 3 நீதிபதிகள் அடங்கிய விசாரணை குழுவை சுப்ரீம் கோர்ட்டு நியமித்தது. அக்குழுவின் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

பணம் கைப்பற்றப்பட்ட அறை, நீதிபதி யஷ்வந்த் வர்மா மற்றும் அவருடைய குடும்பத்தினரின் முழு கட்டுப்பாட்டில் இருந்துள்ளது. பாதி எரிந்த ரூபாய் நோட்டுகள், மறுநாள் அதிகாலையில் அகற்றப்பட்டுள்ளன. கிடைத்துள்ள நேரடி மற்றும் மின்னணு ஆதாரங்கள் அடிப்படையில், நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் தவறான நடத்தையும், குற்றச்சாட்டுகளும் நிரூபணம் ஆகியுள்ளது. அவரை பதவி நீக்கம் செய்வதற்கு இவை போதுமானவை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## செல்போன் டவர் உச்சியில் ஏறி இளைஞர் போராட்டம் காரணம் கேட்ட போலீசார் அதிர்ச்சி



பெங்களூரு, ஜூன் 21

கர்நாடகா மாநிலம் விஜயபுராவை சேர்ந்த இளைஞர் ஒருவர் திருமணம் செய்து வைக்க கோரி தனது பெற்றோரிடம் அடம்பிடித்துள்ளார். அதற்கு அவரது பெற்றோர் வேலைக்கு செல்லும்படி அறிவுரை கூறியுள்ளனர்.

இதனர்ல் ஆத்திரம் அடைந்த இளைஞர் அருகில் உள்ள 100 அடி உயர டவர் உச்சியில் ஏறி தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டியுள்ளார். இளைஞர் டவர் உச்சியில் ஏறி தற்கொலை மிரட்டல் கொடுத்த சம்பவம் அப்பகுதியி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்குவிரைந்தனர.இளைஞரிடன்போலீசார்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதனையடுத்து சுமார் 2 மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தி அந்த இளைஞரை மீட்டனர்.

இந்தநிலையில்அவரிடம்தற்கொலைக்குகாரணம்கேட்டபோலீசார் பெரும் அதிர்ச்சியடைந்தனர். திருமணம் செய்து வைக்ககோரி கேட்டபோது பெற்றோர் வேலைக்கு செல்லும் படி கூறியதால் இந்த முடிவை இளைஞர் எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## திருப்பூரில் 26 வங்கதேசத்தினர் கைது.. போலி ஆதார் அட்டை பெற்று வேலை பார்த்ததாக தகவல்



இந்தியாவின் பல பகுதிகளில் வங்கதேசத்தினர்ஊடுருவி வேலை செய்து கொண்டிருக்கும் நிலையில், திருப்பூரில் 26 வங்கதேசத்தினர் சட்ட விரோதமாக தங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்களிடம் போலி ஆதார் அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர், பல்லடம், அவிநாசி போன்ற பகுதிகளில் தொழிற்சாலைகள் அதிகம் இருப்பதால், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் வருகை தந்து பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், வங்கதேசத்தை சேர்ந்தவர்களும் போலி ஆதார் அட்டைகள் மூலம் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் புகுந்து திருப்பூர் பகுதியில் வேலை செய்து வருவதாக உளவுத்துறை போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து, திருப்பூரில் உள்ள முக்கிய பகுதிகளில் சோதனை செய்த போது, 26 பேர் வங்கதேசத்தினர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களிடம் போலி ஆதார் அட்டை இருந்ததும், அதை வைத்து பனியன் நிறுவனத்தில் வேலை பெற்று பணியாற்றி வந்ததும் தெரியவந்தது. இவர்களை அடுத்து, அவர்களை கைது செய்த காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

"வேலைக்கு வருபவர்களிடம் நாங்கள் ஆதார் அட்டை நகல் வாங்கித்தான் வேலை தருகிறோம். ஆனால், அந்த அட்டை போலியானது என்று எங்களுக்கு தெரியாது. இது குறித்து அரசுதான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று திருப்பூர் தொழில் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

## மனமகிழ் மன்றத்தில் சூதாட்டம் என புகார்போலீசாரின் அதிரடி சோதனையில் சிக்கிய டோக்கன்கள், ஆவணங்கள்

திருப்பூர், ஜூன் 21

திருப்பூரில் உள்ள மனமகிழ் மன்றத்தில் போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் டோக்கன்கள் மற்றும் ஆவணங்களை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலாளர் கைது செய்யபட்டார்.

திருப்பூர் அவிநாசி சாலை பங்களாஸ்டாப் பகுதியில் "திதிருப்பூர் கிளப்" என்ற பெயரில், மனமகிழ் மன்றம் ஆனது செயல்பட்டு வருகிறது.

தற்போது வரை இந்த தனியார் மனமகிழ் மன்றத்தில் 500க்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் வாழ்நாள் உறுப்பினர்களாக இருந்து வரும் நிலையில், இங்கு உறுப்பினராக உள்ளவர்கள் தங்களுடைய நேரத்தை செலவீடு செய்வதற்காக டென்னிஸ், பேஸ்கட் பால் போன்ற விளையாட்டு வகைகள் உள்ளது.

இந்நிலையில் தற்பொழுது இந்த கிளப்பில் உள்ள ஒரு அறையில் டேபிள் அமைத்து பலர் சீட்டு ஆடுவது போன்ற சிசிடிவி காட்சிகள் வெளியாகி உள்ளது.



## கனமழை.. பவானிசாகர் அணை நீர்மட்டம் உயர்வு



சத்தியமங்கலம்:மேட்டூர்அணைக்குப் பிறகு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய அணையான பவானி சாகர் அணை 105 அடி உயரமும் 32.8 டிஎம்சி கொள்ளளவும் கொண்டது.

இந்த அணை ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதிகளை வழங்குகிறது. அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான நீலகிரி மலைகள் மற்றும் வட கேரளாவில் பரவலாக மழை பெய்து வருகிறது. கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கும் 'ரெட் அலர்ட்' விடுக்க ப்பட்டுள்ளது.

மழை காரணமாக, பவானி ஆறு மற்றும் மாயா நதியில் பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணைக்கு நேற்று நீர் வரத்து 3927 கன அடியாக இருந்த நிலையில், நீர் வரத்து அதிகரித்ததால் இன்று காலை 8438 கன அடியாக அதிகரித்தது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 84.31 அடியாகவும், நீர் இருப்பு 18.0 டிஎம்சியாகவும் உள்ளது.

தற்போது, அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக 850 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது,

இதில் பவானி ஆற்றில் 850 கன அடி தண்ணீரும், கீழ் பவானி கால்வாயில் 5 கன அடி தண்ணீரும் சேர்ந்து மொத்தம் 855 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால் பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

## சோப் ஆயில் தொழிற்சாலையை முற்றுகையிட்ட கிராம மக்கள் ஆலையின் கழிவு நீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாக புகார்

ஈரோடு மாவட்டம் வில்லரம்பட்டி அருகே சோப் ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலையை கிராம மக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. மொக்கையாம்பாளையம் பகுதியில் 10 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் தனியாருக்கு சொந்தமான சோப் ஆயில் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் நிலைகளில் கலப்பதால், நிலத்தடி நீர் மாசடைந்து வருவதாக அந்த பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.

இதனையடுத்து, மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆலையை ஆய்வு செய்ததோடு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததால் மக்கள் கலைந்து சென்றனர். சோப் ஆயில் தொழிற்சாலையை முற்றுகையிட்ட கிராம மக்கள் ஆலையின் கழிவு நீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவித்தூல்ளனர்





# தண்ணீர் லாரி மோதி சிறுமி பலி: கட்டுப்பாடுகளை கடுமையாக்க போலீஸ் கமிஷனர் உத்தரவு

சென்னை, ஜூன் 21

சென்னை பேப்பர் மில்ஸ் சாலையில் தண்ணீர் லாரி மோதி சிறுமி பலியானசம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தையொட்டி போக்குவரத்து போலீசாருக்கு போலீஸ் கமிஷனர் அருண் கடுமையான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பாக, விபத்து நடந்த பகுதியை சேர்ந்த போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சுடலை மணி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அந்த பகுதி போக்குவரத்து போலீஸ் உதவி கமிஷனர் சத்யமூர்த்தி மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



சென்னை நகருக்குள் தண்ணீர் லாரி போன்ற கனரக வாகனங்களை காலை 6 மணிக்கு மேல் அனுமதிக்க கூடாது என்பது ஒரு விதியாக அமலில் உள்ளது. அந்த விதியை மீறி தண்ணீர் லாரி சென்னை நகருக்குள் அனுமதிக்கப்பட்டதால்தான் சிறுமியின் உயிர்பலி சம்பவம் நடந்து விட்டது.

எனவே, தண்ணீர் லாரி விசயத்தில் விதிமுறைகளை போக்குவரத்து போலீசார் கடுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும், இதை கடைபிடிக்காத போக்குவரத்து போலீசார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், விபத்தினால் உயிர்பலிக்கு காரணமாகும் வாகனங்களை உடனடியாக பறிமுதல் செய்ய வேண்டும். அந்த வாகனங்களை 100 நாட்களுக்கு பிறகுதான் விடுவிக்க வேண்டும் என்பதும் ஒரு விதியாக உள்ளது.

அந்த விதியையும் இனிமேல் கடுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் போக்குவரத்து போலீசாருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. சிறுமி பலியான விபத்துக்கு காரணமான தண்ணீர் லாரியின் டிரைவர் பார்த்தசாரதியின் ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்ய போக்குவரத்து துறைக்கு பரிந்துறை செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக விபத்து தொடர்பாக தண்ணீர் லாரியின் டிரைவர் பார்த்தசாரதி கைது செய்யப்பட்டார்.

# வாக்குறுதிகளை அரைகுறையாக நிறைவேற்றும் தி.மு.க. அண்ணாமலை கண்டனம்



சென்னை, ஜூன் 21

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தேர்தல் அறிக்கையில் பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து, ஆட்சிக்கு வந்ததும் அவற்றை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு, மீண்டும் தேர்தல் நெருங்கும்போது, வாக்குறுதிகளை அரைகுறையாக நிறைவேற்றும் தி.மு.க.வின் ஏமாற்று வித்தை, காவல்துறையினர் பதவி உயர்விலும் தொடர்வது, கடுமையான கண்டனத்துக்குரியது.

தனது தேர்தல் வாக்குறுதி எண் 389ல், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, மொத்தம் 20 ஆண்டுகளில் எஸ்.எஸ்.ஐ. பதவி உயர்வு வழங்கப்படும் என்று கூறியிருந்ததை, நான்கு ஆண்டுகளாக நிறைவேற்றாமல், தற்போது இன்னும் ஒரு ஆண்டில் தேர்தல் வரவிருப்பதால், குழப்பமான ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறது தி.மு.க. அரசு.

இந்த அரசாணையின் படி, கடந்த 2011ம் ஆண்டுக்குப் பிறகு பணியில் சேர்ந்த காவல்துறையினருக்கு, எஸ்.எஸ்.ஐ. பதவி உயர்வுக்கு, மொத்தம் 23 ஆண்டுகள் பணி அனுபவம் தேவை என்றும், 2011ம் ஆண்டுக்கு முன்பாகப் பணியில் சேர்ந்தவர்களுக்கு, மொத்தம் 25 ஆண்டுகள் பணி அனுபவம் தேவை என்றும் பிரிவினையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தவா நான்கு ஆண்டுகள் எடுத்துக் கொண்டீர்கள் என்ற கேள்வி, காவல்துறையிடையே எழுந்துள்ளது. இந்தத் தேவையற்ற குழப்பத்தைத் தவிர்க்க, தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்ததைப் போல, காவல்துறையினரின் மொத்த பணி அனுபவத்தைக் கணக்கில் கொண்டு, பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியது போல மொத்தம் 20 ஆண்டுகள் பணி நிறைவு செய்தும், இன்னும் தலைமைக் காவலர்களாகவே இருக்கும் காவலர்கள் அனைவருக்கும், எஸ்.எஸ்.ஐ. பதவி உயர்வு கிடைக்கு மாறு, அரசாணையைத் திருத்தி வெளியிட வேண்டும் என்று, திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஆன்லைன் லோன் ஆப்களை தவிர்த்து எச்சரிக்கையாக இருங்கள்: திருநெல்வேலி எஸ்.பி. சிலம்பரசன் அறிவுறுத்தல்




திருநெல்வேலி ஜூன் 21

இணையதளத்தில் தற்போது மிக தீவிரமாக செயல்பட்டு வரும் ஆன்லைன் லோன் ஆப் (ON LINE LOAN APP) மோசடி அனைத்து இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

மோசடி நடைபெறும் விதம்: உங்களது தொலைபேசியில் வாட்ஸ்ஆப் வாயிலாக அறிமுகமில்லாத எண்களிலிருந்து நீங்கள் ஆன்லைன் லோன் ஆப்பில் லோன் எடுத்துள்ளதாகவோ அல்லது உங்களது நண்பர்கள், உறவினர்கள் லோன் எடுத்துள்ளதாகவோ கூறி அதற்கான பணத்தை செலுத்தக்கூறி தங்களது போட்டோ அல்லது தங்களது குடும்பத்தினரின் போட்டோவை எடுத்து அதை ஆபாசமாக சித்தரித்து பணம் கேட்டு மிரட்டுவார்கள். மேலும் ஆன்லைனில் லோன் ஆப்களில் கடன் பெறுவதற்கு அணுகும் போது உங்களின் செல்போனில் உள்ள தொடர்பு எண்கள் (mobile contacts) மற்றும் புகைப்படங்கள் (photos) ஆகிய தகவல்களை அவர்கள் பெற்றுக்கொண்டு தான் லோன் (Loan) கொடுப்பார்கள். கடன் பெற்ற தொகையைத் திருப்பி செலுத்திய பிறகும் நீங்கள் மேற்கொண்டு பணம் செலுத்த வேண்டியுள்ளது எனக் கூறி உங்கள் மொபைல் போனில் எடுக்கப்பட்ட உங்களது குடும்பத்தினரின் போட்டோக்களை ஆபாசமாக சித்தரித்து அதை உங்களது தொடர்பில் உள்ள அம்மா, அப்பா, அண்ணன், அக்கா மற்றும் உறவினர்கள் ஆகியோரின் செல்போன் எண்களுக்கு அனுப்பி உங்களை மிரட்டி பணம் பறிக்கக்கூடும். எனவே உங்களது போனில் உள்ள whatsapp privacy settingsஐ மாற்றி கொண்டும், சமூக வலைதளங்களில் வரும் லோன் ஆப்களில் லோன் எடுப்பதைதவிர்க்கவேண்டும். மேலும் இதுபோன்று ஏமாற வேண்டாம் எனவும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இது போன்ற சைபர் கிரைம் நடைபெற்றால் சைபர் கிரைம் இணையதளமான www.cybercrime.gov.in என்பதிலும், 1930 என்ற டோல் ப்ரீ (Toll Free) எண்ணிலும் அழைத்து உடனடியாக உங்களுடைய புகாரினை பதிவு செய்ய வேண்டும் என திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

# கரூரில் அதிர்ச்சி: மினி லாரி கார் மோதி பயங்கர விபத்து

கரூர், ஜூன் 21

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் 6 பேர் அரவகுறிச்சி அருகே ஆம்னி காரில் வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த மினி லாரி நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காரில் பயணித்த 6 பேரும், மினி லாரியை ஓட்டி வந்த டிரைவரும் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் காரில் இருந்தவர்கள் காருக்குள் வசமாக சிக்கிக்கொண்டனர். இதனையடுத்து



இவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். தொடர்ந்து அனைவரும் கரூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக அரவக்குறிச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிவகங்கை: மேம்பாலத்தில் சென்ற பஸ்சில் திடீர் தீ 50 பயணிகள் தப்பினர்



சிவகங்கை, ஜூன் 21

மதுரையில் இருந்து சிவகங்கை, காளையார்கோவில், மறவமங்கலம் வழியாக இளையான்குடிக்கு தினசரி தனியார் பஸ் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த பஸ் இளையான்குடியில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சிவகங்கை வழியாக மதுரை நோக்கி வந்து கொண்டிருந்தது.

பஸ்சில் 50 பயணிகள் இருந்தனர். பஸ்சை டிரைவர் முத்துக்குமார் ஓட்டிவர் ஓட்டினார். பாலமுருகன்என்பவர்கண்டக்டராக இருந்தார். சிவகங்கையில் உள்ள ரெயில்வே மேம்பாலம் வழியாக பஸ் வந்து கொண்டிருந்தது. அப்போது, என்ஜின் பகுதியில் இருந்து திடீரென கரும் புகை வெளியேறி தீப்பிடிக்க தொதாடங்கியது. பஸ் திடீரென தீப்பிடித்ததால் பயணிகள் அலறினர்.

உடனடியாக டிரைவர் முத்துக்குமார், பஸ்சை பாலத்தின் ஓரத்தில் நிறுத்தி அனைவரையும் உடனடியாக கீழே இறங்க செய்தார். தகவல் அறிந்து தீயணைப்புத்துறை அலுவலர் நாகநாதன் தலைமையிலான வீரர்கள் விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுப்படுத்தினர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் கூட்டம் கூடியது. அப்போது 2 மோட்டார்சைக்கிள் எதிர்பாராதவிதமாக மோதிக்கொண்டதில் 2 பேர்காயம் அடைந்தனர். சிகிச்சைக்காக இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

# மதத்தை கடந்து 7 வருடமாக தொடர்ந்த காதல்.. காதலி வீட்டில் எதிர்ப்பு.. ஐ.டி. ஊழியர் எடுத்த விபரீத முடிவால் அதிர்ச்சி

குலசேகரம், ஜூன் 21

குமரி மாவட்டம் குலசேகரம் அருகே உள்ள காவுவிளை பகுதியை சேர்ந்தவர் துரைசாமி. இவருடைய மனைவி தனலெட்சுமி. இவர்களுடைய மகன் தனுஷ் (வயது 22). என்ஜினீயரிங் முடித்த இவர் கோவையில் ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்.

முன்னதாக இவர், குலசேகரம் காவல்ஸ்தலம் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 10ம் வகுப்பு படித்த போது அதே பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவரை காதலித்தார். இவர் வேறு மதத்தை சேர்ந்தவர். மதத்தை கடந்து இருவரும் நேசித்தனர்.

பின்னர் அந்த மாணவி பிளஸ்2 முடித்ததும் களியக்காவிளையில் உள்ள ஒரு கல்லூரியில் பி.எஸ்.சி. படித்தார். இதற்கிடையே தனுஷின் குடும்பத்தினர் கோவையில் குடியேறினர். வெவ்வேறு ஊருக்கு சென்றாலும், தனுஷ் தனது காதலை வளர்ப்பதில் கண்ணும், கருத்துமாக இருந்தார். அவ்வப்போது குலசேகரத்திற்கு வந்து காதலியை சந்தித்து வந்தார். இந்த பள்ளி பருவ காதல் கல்லூரியிலும் தொடர்ந்தது.

இதனைத்தொடர்ந்து தனுஷ் என்ஜினீயரிங் முடித்து கோவையில் ஐ.டி. ஊழியராக பணிபுரிந்தார். அதே சமயத்தில் பட்டப்படிப்பு முடித்த காதலி, மேற்கொண்டு உயர் கல்வி படிக்க கோவையை தேர்வு செய்தார். கோவையில் படித்தால் காதலனை சந்திக்க வாய்ப்பு இருக்கும் என கருதி இந்த முடிவை எடுத்தார்.



ஆனால் காதலியின் பெற்றோருக்கு இது தெரியாது. கோவையில்காதல் ஜோடி சிறகடித்து பறந்தது. தங்களுக்கென்ற காதல் உலகத்தில் இருவரும் மெய்மறந்து வாழ தொடங்கினர்.

இவ்வாறு காதல் இனிமையாக சென்ற நிலையில், காதல் விவகாரம் இருவீட்டாருடைய பெற்றோருக்கும் தெரிய வந்தது. இந்த காதலை கடுமையாக எதிர்த்தனர். அதோடு நின்று விடாமல் காதல் ஜோடியை பிரிக்க காதலி குடும்பத்தினர் நினைத்தனர். இதற்காக மாணவியின் படிப்பை அவருடைய குடும்பத்தினர் பாதியில் நிறுத்தினர்.

மேலும் அவசர, அவசரமாக மாப்பிள்ளை பார்த்தனர். இதனை அறிந்த தனுஷ் அதிர்ச்சி அடைந்தார். காதலியை கைபிடித்தே ஆக வேண்டும் என்பதில் தனுஷ் உறுதியாக இருந்தார். எனவே முறைப்படி வீட்டுக்கு சென்று பெண்ணும் கேட்டார். ஆனால் அதற்கு காதலி குடும்பத்தினர் செவி சாய்க்கவில்லை.

காதலியின் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியதோடு அவளை சந்திக்கும் வாய்ப்பை தனுசுக்கு கிடைக்காமல் பெற்றோர் பார்த்துக் கொண்டனர். இதற்காக காதலியை வீட்டிலேயே சிறை வைத்தனர். செல்போனில் தனுஷ் தொடர்பு கொள்ளாதபடி மாற்று நடவடிக்கையில் களம் இறங்கினர். இது தனுஷின் மன நிம்மதியை நிலைகுலை வைத்தது. காதலியை சந்திக்க முடியாமல் பித்து பிடித்ததை போன்று சுற்றி திரிந்துள்ளார்.

இனியும் தாமதித்தால் காதலி கைகூட மாட்டார், அவரை சந்தித்து மணமுடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும், இல்லையென்றால் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்ற அதிர்ச்சி முடிவை தேர்ந்தெடுத்தார். அதன்படி நேற்று முன்தினம் இரவு காதலியை தேடி அவருடைய ஊருக்கு வந்தார். காதலியை எப்படியாவது சந்தித்து விட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அவருக்கு தோல்வியே மிஞ்சியது.

இதனால் வாழ்க்கையில் வெறுப்படைந்த அவர், காதலி தான் கிடைக்கவில்லை, அவருடைய வீட்டிலேயே உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என முடிவெடுத்து புறப்பட்டார். காதலி வீட்டின் சுற்றுப்புற சுவரில் ஏறி குதித்து மாடியில் ஏறினார். பிறகு அங்கு தூக்கு மாட்டி தன்னுடைய உயிரைமாய்த்துக்கொண்டார். மாடிக்கு சென்ற காதலி, அவருடைய தாயார், இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். காதலன் தன் கண் முன்னே பிணமாக தொங்குவதை பார்த்து மாணவி கதறி அழுதார். மேலும் இதுபற்றி தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே மகனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக, தனுஷின் பெற்றோர், உறவினர்கள் குற்றச்சாட்டி, குலசேகரம் காவல்நிலையத்தில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

# மக்களை பிளவுபடுத்தவே ஆன்மிக மாநாடு: திருமாவளவன்

சென்னை, ஜூன் 21

விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி. செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது;

"மதத்தின் பெயரால் மக்களைபிளவுபடுத்தவே முருகன் பெயரில் மாநாடு நடத்துகின்றனர். மாநாட்டின் நோக்கத்தை பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திக்கொண்டே இருப்போம். தமிழிலும் குடமுழுக்கு என்பது



அதற்கான முதல் கட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழில்தான் குடமுழுக்கு என்ற நிலை ஒருநாள் வரும்." என்றார்.

# முருக பக்தர்கள் மாநாடு; தி.மு.க. தோல்வி பயத்தில் இருப்பதால் விமர்சிக்கிறது நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூன் 21

இந்து முன்னணி சார்பில் மதுரையில் வரும் 22ஆம் தேதி முருக பக்தர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் உத்தர பிரதேச முதல் மந்திரி யோகி ஆதித்ய நாத், ஆந்திர துணை முதல்மந்திரி பவன் கல்யாண், மத்திய மந்திரிகள், பா.ஜ.க. தேசிய தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர். மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் பலர் 15ந்தேதியில் இருந்து விரதம் இருந்து வருகின்றனர்.



இந்த மாநாடு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என மத்திய மந்திரி எல்.முருகன் தெரிவித்துள்ளார். அதே சமயம், இது சங்கிகள் மாநாடு என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு விமர்சித்துள்ளார். மேலும் வி.சி.க. தலைவர் திருமாவளவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட பல்வேறு தி.மு.க. கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், இந்த மாநாடு தொடர்பாக பா.ஜ.க.வை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை வடபழனியில் உள்ள பழனி ஆண்டவர் கோவிலில் நயினார் நாகேந்திரன் சாமி தரிசனம் செய்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "எங்களைப் பொறுத்தவரை முருகர் தமிழ் கடவுள். தி.மு.க. தோல்வி பயத்தில் இருப்பதால், முருக பக்தர்கள் மாநாட்டை விமர்சிக்கிறது" என்று தெரிவித்தார்

# "கெட்டுப்போன கேக்கை விக்கலாமா?" ஓனரின் வாயில் கேக்கை திணித்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண்

நாமக்கல், ஜூன் 21

புதுச்சத்திரம் அருகே உள்ளது பாச்சல் பஸ் நிலையம். அங்கு குணசேகரன் என்பவர் பேக்கரி கடை நடத்தி வருகிறார். அவரது மனைவி தனலட்சுமி பேக்கரியை கண்காணித்து வந்தார். அந்தபேக்கரியில் கெட்டுபோன கேக் விற்பனை செய்யப்பட்டதாக சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்று நேற்று வைரலானது.

அதில், பெண் வாடிக்கையாளர் ஒருவர் கெட்டுப்போன கேக்கை எதற்காக விற்பனை செய்தீர்கள் என கேட்பதும், அந்த கேக்கை நீங்களே சாப்பிடுங்கள் என அந்த பெண் தனலட்சுமிக்கு ஊட்ட முற்படுவதும் போன்ற காட்சிகளாக இருந்தது.



இதையடுத்து அந்த பேக்கரியில் நாமக்கல் மற்றும் புதுச்சத்திரம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்கு அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. மேலும் உணவு பொருட்களுக்கான தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி குறிப்பிடாமல் விற்பனை செய்யப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அந்த பேக்கரி கடைக்கு ரூ.4 ஆயிரம் அபராதம் விதித்தார். மேலும் உணவு பாதுகாப்பு துறையினர் நடத்திய விசாரணையில், சமூக வலைதளங்களில் பரவிய வீடியோவானது, சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் என்பது தெரிய வந்தது. 'இதையடுத்து எதற்காக தற்போது அந்த வீடியோ பரப்பப்படுகிறது?, பாதிக்கப்பட்ட பெண் யார்? ஆகியவை குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# தரமற்ற கட்டடங்களை கட்டி பொதுமக்களின் உயிரோடு விளையாடுவதுதான் அரசின் சாதனையா? டி.டி.வி. தினகரன்



சென்னை ஜூன் 21

தரமற்ற கட்டடங்களை கட்டி பொதுமக்களின் உயிரோடு விளையாடுவதுதான் திராவிட மாடல் அரசின் சாதனையா என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூரில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினால் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக திறந்து வைக்கப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேபோல, சென்னை திருவான்மியூர் பெரியார் நகர் பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் மேற்கூரைகள் அடிக்கடி பெயர்ந்து விழுவதால் குடியிருப்புவாசிகள் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

நாமக்கல் அருகே மேம்பாலம் திறக்கப்பட்ட நாளிலேயே விரிசலுக்குள்ளான செய்தியில் தொடங்கி, அடிக்கடி மேற்கூரை பெயர்ந்து விபத்துக்குள்ளாகும் அரசுப்பள்ளி வகுப்பறைகள், கட்டி முடிக்கப்பட்டு மூன்று மாதங்களில் தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட மேம்பாலம் வரை தொடர்ந்து ஏற்படும் விபத்துகளும், விரிசல்களும் தி.மு.க.வின் திராவிட மாடல் அரசின் கட்டுமான லட்சணத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

கட்டுமானப் பணிகளின்போது அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு அதன் தரத்தை உறுதி செய்ய வேண்டிய தி.மு.க. அரசு, அதற்கு நேர்மாறாக எப்போது திறப்பு விழா நடத்தலாம் ? எவ்வாறெல்லாம் விளம்பரம் செய்யலாம் ? என்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்தி வருவதால் பொதுமக்களின் உயிர் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

அதோடு, கட்டி முடிக்கப்பட்ட சில மாதங்களிலேயே கட்டடங்களும், பாலங்களும் விபத்துக்குள்ளாவதும், அதனை சீரமைக்கிறோம் எனும் பெயரில் மேலும் பல கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதும் தொடர்கதையாகி வருவதன் மூலம் தமிழக அரசு நிர்வாகத்தில் ஊழல் மற்றும் முறைகேடுகள் காட்டாற்று வெள்ளம் போல் கரைபுரண்டு ஓடுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரசுப்பள்ளி வகுப்பறைகள் தொடங்கி நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகள் வரை நடைபெறும் கட்டுமானப் பணிகளை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு அதன் தரத்தை உறுதி செய்த பின்னரே திறப்பு விழா காண வேண்டும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஜீன் 30க்குள் மகளிர் உரிமை துறையில் தற்காலிக பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்: திருநெல்வேலி கலெக்டர் தகவல்



திருநெல்வேலி ஜூன் 21

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வள்ளியூர் ஒருங்கிணைந்த சேவை மையம் மற்றும் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளைத் தடுக்கும் நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் வள்ளியூர் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) இயங்கி வருகின்றது. அதில் சுழற்சி முறையில் வழக்கு பணியாளர்1 பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சுழற்சி முறையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் மற்றும் மூன்றாம் பாலினத்தினர் ஆகிய விண்ணப்பதாரர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிட செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் தரவு நுழைவு பணியாளர் 1, (Data Entry Operator) பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் https://tirunelveli.nic.in/ என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு ஜீன் 30ம் தேதிக்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கீழடியை தடுப்போர் வரலாற்றில் புதையுண்டு போவர் ராமதாஸ்



சென்னை, ஜூன் 21

கீழடி ஆய்வு அறிக்கையை மத்திய அரசு ஏற்காத நிலையில், பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது; "கீழடியில் கிடைத்திருப்பது தமிழர்தம் பெருமை மட்டுமல்ல. மானுடத்தின் பெருமை. தோண்டுவதில் கிடைக்கும் பொன்னிலும் மண் இருக்கலாம். ஆனால், அதை அரசியலாக்குவோர் மண்டைகளிலும் இருப்பதுதான் சிக்கல்.

பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் அரும் பொருள்கள் இன்று நம் கைகளுக்குக் கிடைத்திருக்கின்றன என்றால் இன்னும் எத்தனை ஆயிரமாண்டுகள் ஆனாலும் அவை வெளிவந்தே தீரும் என்பது இயற்கையின் நியதி.

கிடைத்ததைக் கொண்டாடி, அடுத்த தலைமுறைக்கும் நாகரிகத்தைக் கடத்துவதே நம் கடமை என்பதை 'அரசியல் பிழைப்போர்' உணர வேண்டும். கீழடி தமிழர்களின் தொன்மையை தடுப்போர் எவராயினும் வரலாற்றில் தோண்டுவாரின்றி புதையுண்டு போவார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்களிடம் கனிவுடன் நடக்க வேண்டும்: எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் போலீசாருக்கு அறிவுரை



தூத்துக்குடி, ஜூன் 21

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் இன்று (19.6.2025) திருச்செந்தூர் காவல் நிலையத்தில் வருடாந்திர ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் காவல் நிலைய போலீசாரின் உடைமைகளை (Kit Inspection) பார்வையிட்டும், அங்கு பராமரிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் முக்கிய வழக்கு கோப்புகளை பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.

மேலும் அவர், திருச்செந்தூர் காவல் நிலைய போலீசாரிடம் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், புகார் மனு பதிவு செய்ததற்கான வரவேற்பு சீட்டை (Reception Slip) வரவேற்பாளர் மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார். இந்த நிகழ்வின்போது திருச்செந்தூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் இன்னோஷ்குமார் உள்பட காவல்துறையினர் உடனிருந்தனர்.

# விடுதியில் தங்கி படிக்க பி.சி., எம்.பி.சி. கல்லூரி மாணவர்கள் ஜீலை 15க்குள் விண்ணப்பிக்கலாம் தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூன் 21

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் பள்ளி மாணவர், மாணவியர்களுக்காக 29 பள்ளி விடுதிகளும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக 5 அரசு கல்லூரி விடுதிகள் ஆக 34 விடுதிகள் அனைத்து வட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்:

மேற்சொன்ன பள்ளி விடுதிகளில் 4 முதல் 12 வகுப்பு வரை பயில்கின்ற மாணவர், மாணவியர்களும் கல்லூரி/ பாலிடெக்னிக்/ ஐடிஐ விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக்/ ஐடிஐ படிப்புகளில் பயிலும் மாணவர், மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர்.

பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மாணவரின் இருப்பிடம்கல்விநிலையத்திற்கு 8 கி.மீ.க்கு அப்பால் இருக்க வேண்டும். (மாணவியருக்கு இவ்விதி பொருந்தாது)

பள்ளி விடுதிகள் செயல்படும் இடங்கள்:

தூத்துக்குடி, கழுகுமலை, கோவில்பட்டி, காயாமொழி, வெள்ளாளன் விளை, கீழராமசாமிபுரம், குலசேகரன்பட்டினம், மணப்பாடு, பணிக்க நாடார் குடியிருப்பு, விளாத்திகுளம், கே.தங்கம்மாள்புரம், புதூர், சாத்தான்குளம், கொம்மடிக்கோட்டை, ஆனந்தபுரம், படுக்கப்பத்து, கருங்குளம், எட்டயபுரம், சுப்பம்மாள்புரம், பெரியசாமிபுரம் மற்றும் கயத்தார் பகுதிகளில் இயங்குகின்றன.

கல்லூரி விடுதிகள்:

தூத்துக்குடி போல்டன்புரம் (ம) தாளமுத்துநகர், கோவில்பட்டி, நாகம்பட்டி ஆகிய இடங்களில் விடுதிகள் செயல்படுகின்றன.

விடுதிகளில் வழங்கப்படும் சலுகைகள்:

தினசரி நிகழ்வுகளை அறிந்துகொள்ள ஒவ்வொரு விடுதிக்கும் 2 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்கள் நூலகப் புத்தகங்கள் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

4ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர், மாணவியருக்கு நான்கு இணைச்சீருடைகள்வழங்கப்படுகிறது. 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பயிலும் மாணவர், மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி மற்றும் சிறப்பு வழிகாட்டிகள் நூல்கள் வழங்கப்படுகிறது.

அனைத்து விடுதி மாணவ, மாணவியர்களுக்கும் காற்றோட்டத்துடன் கூடிய தங்குமிடம் (ம) இறைச்சி, முட்டையுடன் கூடிய சத்தான உணவுகள்வழங்கப்படுகிறது.

மேலும், விடுதிகளில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, விளையாட்டு உபகரணங்கள், நீர்சுத்திகரிப்பு கருவி, புத்தக அலமாரி, இன்வெர்ட்டர் கருவி, இரண்டடுக்கு கட்டில்கள், பள்ளி மாணவ, மாணவியருக்கு பாய்கள், கல்லூரியில் பயில்பவர்களுக்கும் ஜமக்காளம் மற்றும் போர்வை வழங்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் முறை:

தகுதியுடைய மாணவ, மாணவியர்கள், விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளிடத்திலோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலோ கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி விடுதிகளுக்கு 14.6.2025 வரையும், கல்லூரி விடுதிகளுக்கு 15.7.2025 வரையும் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினிகள் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மாணவ, மாணவியர்கள் விடுதியில் சேரும் நேரத்தில் சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு விடுதியிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்களை எக்காலத்திலும் எந்தநேரத்திலும் எந்த வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

எனவே வறுமை நிலையில் வசிக்கும் மாணவ, மாணவியர் கல்வி இடைநிற்றலை தவிர்த்து அரசின் சலுகைகளை அனுபவித்து கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் எனவும் அனைத்து பிரிவினரும் கட்டாயம் கல்வி கற்பதற்கு அவர்களது பெற்றோர்/ பாதுகாவலர் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மூத்த குடிமக்கள் செயலியை பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி, ஜூன் 21

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மூத்த குடிமக்கள் நலன் கருதி சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் உருவாக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் செயலி (Senior Citizen App) Seniorcitizen.tnsocialwelfare.tn.gov.in (கைப்பேசி செயலி) சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் செப்டம்பர், 2023ல் வெளியிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த கைப்பேசி செயலியில் மூத்த குடிமக்களுக்கு தேவையான வழிகாட்டுதல் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக அருகாமையில் உள்ள முதியோர் இல்லங்கள், மருத்துவமனைகள், மக்கள் மருந்தகம், மத்திய மாநில திட்டங்கள், மாவட்ட சட்ட சேவைகள் ஆணையம், அதிகாரிகள் விவரம், உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியம் பற்றிய விவரங்கள், மாற்று மருத்துவ மருத்துவமனை விவரங்கள் மற்றும் குறைகள் தெரிவித்திடவும் இந்த மூத்த குடிமக்கள் கைப்பேசி செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த கைப்பேசி செயலி மூலம் தமிழ்நாடு மூத்த குடிமக்கள் பலரும் பயன்பெற்று வருகிறார்கள். எனவே, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து மூத்த குடிமக்களும் Senior Citizen App (Seniorcitizen.tnsocialwelfare.tn.gov.in) என்ற கைப்பேசி செயலியை பதிவிறக்கம் செய்து தங்களுக்கு தேவையான விபரங்களை பெற்று பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 80 வயது மூதாட்டி பாலியல் பலாத்கார வழக்கு: தேசிய மகளிர் ஆணையம் விசாரணை



கடலூர், ஜூன் 21

கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 80 வயது மூதாட்டி நேற்று முன்தினம் அங்குள்ள சாலையில் தனியாக நடைப்பயிற்சி சென்றார். அப்போது சாலை ஓரத்தில் அமர்ந்து மது குடித்து கொண்டிருந்த 2க்கும் மேற்பட்ட வாலிபர்கள் திடீரென மூதாட்டியை வலுக் கட்டாயமாக அங்குள்ள சவுக்கு தோப்புக்குள் இழுத்து சென்றனர்.

பின்னர் அவர் அணிந்திருந்த ஆடைகளை கிழித்து கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததோடு அவர் காது, மூக்கில் அணிந்திருந்த 1 பவுன் நகைகளை அறுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பி சென்றனர். பின்னர் உடல் நிலை பாதிக்கப்பட்டு கிடந்த மூதாட்டியை அந்த வழியாக சென்ற பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக சிதம்பரத்தில் உள்ள மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவத்தில் தொடர்புடையவர்களை பிடிக்க மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் தலைமையில் 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. தனிப்படை போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் பண்ருட்டி, எஸ்.கே.பாளையம், மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த சுப்பையா என்பவரின் மகனும் ரவுடியுமான சுந்தரவேல்(வயது 25) என்பவருக்கு இந்த வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து தனிப்படை போலீசார் அவரை பிடிப்பதற்காக தேடினர். அப்போது காடாம்புலியூர் அருகே மேல்மாம்பட்டில் உள்ள பழைய சாராய தொழிற்சாலையின் பின்புறம் முந்திரித்தோப்பு அருகில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் அங்கு விரைந்து சென்று சுந்தரவேலுவை பிடிக்க முயன்றனர். அப்போது அவர் திடீரென மறைத்து வைத்திருந்த வீச்சரிவாளால் போலீசாரை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓட முயன்றார்.

இதில் போலீஸ்காரர் குபேந்திரன் படுகாயம் அடைந்தார். உடனே சுதாரித்துக்கொண்ட பண்ருட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலுமணி துப்பாக்கியால் சுந்தரவேலுவை நோக்கி சுட்டார். இதில் காலில் குண்டு பாய்ந்து விழுந்த அவரையும், வெட்டுக்காயம் அடைந்த போலீஸ்காரர் குபேந்திரனையும் போலீசார் மீட்டு சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இதனிடையே, இந்த வழக்கு தொடர்பாக தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தி வருகிறது. மேலும் இந்த வழக்கு தொடர்பாக தமிழக அரசுக்கு மகளிர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. அதில், வழக்கை விரைந்து விசாரித்து 3 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

ராமேசுவரம், ஜூன் 21

மீன்பிடி தடைக்கால சீசன் கடந்த 14ந்தேதியுடன் முடிவடைந்தது. ஆனால் பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் காரணமாக விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு இருந்தது. காற்றின் வேகம் குறைந்த நிலையில் பாம்பன் தெற்குவாடி துறைமுக பகுதியில் இருந்து கடந்த 17ந்தேதி, மீன் துறை அதிகாரிகளிடம் அனுமதி டோக்கன் பெற்று 105 விசைப்படகுகளில் சுமார் 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் தென்கடலான மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்றனர்.

நேற்று காலை அனைவரும் கரை திரும்பினார்கள். மீனவர்கள் வலையில் சீலா, மாவுலா, பாறை, முரள், களவாய், கணவாய், கடல் விரால், கிளாத்தி, திருக்கை, காரல், தடியன், விளை, கிளி உள்ளிட்ட பல வகையான மீன்கள் கிடைத்திருந்தன. 2 மாத தடைக்காலம் முடிந்து முதல் முறையாக மீன் பிடிக்க சென்று கரை திரும்பிய ஒவ்வொரு படகிலும் சுமார் 2 டன் வரை மீன்கள் கிடைத்திருந்தன. ஒரு சில படகுகளில் 3 டன் வரையிலும் மீன்கள் கிடைத்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், மீன் பிடி தடைக்காலம் முடிந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற ராமேசுவரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தி உள்ளனர்.

மீனவர்களை தாக்கி விரட்டியடித்துவிட்டு, அவர்களிடம் இருந்த மீன்களை இலங்கை கடற்படையினர் அள்ளிச் சென்றதாக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் மீனவர்களின் படகு ஒன்றுக்கு ரூ.2 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மீனவர் ஒருவர் கூறுகையில், நேற்று கடலுக்கு போயிருந்தோம். முதல் நாளே இலங்கை கடற்படை எங்களை தாக்கியதுமீன், இறால், நண்டு எல்லாவற்றையும் அள்ளிச் சென்றுவிட்டார்கள். எங்கள் அனைவரும் முட்டி போட வைத்து மிரட்டினார்கள்.

கெட்ட வார்த்தையில் திட்டினார்கள். பின்னர், எங்களை இந்தியா செல்லுங்கள்.. இந்தியா செல்லுங்கள் என்று கூறினார்கள் என்று தெரிவித்தார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

21.6.2025

## சாத்தூர்: தீப்பெட்டி ஆலையில் தீ விபத்து

சாத்தூர், ஜூன் 21

சாத்தூர் அருகே தென்றல் நகர் பகுதியை சேர்ந்தவர் தீப்திஜெயின் (வயது 45). இவருக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலை படந்தால் கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த தீப்பெட்டி தொழிற்சாலையில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் நேற்று முன்தினம் மாலை பணி முடிந்து வீட்டிற்கு சென்றனர்.



பின்னர் இரவில் தீப்பெட்டி ஆலையில் இருந்து புகை வெளியானது. இதைப்பார்த்ததும் அருகில் இருந்தவர்கள் சாத்தூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் உள்ளே சென்று பார்த்ததில் ஆலை முழுவதும் தீ பரவியது. சுமார் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

தீ விபத்தில் தொழிற்சாலையில் இருந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீப்பெட்டி பண்டல்கள், 20க்கும் மேற்பட்ட மருந்துடன் கூடிய தீக்குச்சி மூடைகள் முழுவதும் எரிந்து சாம்பலாகின. தீவிபத்து குறித்து சாத்தூர்நகர்போலீசார்விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வீட்டுக்குள் நுழைய முயன்ற காட்டுயானை விவசாயிகள் அச்சம்

கோவை, ஜூன் 21

கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய நிலையிலும், ஒரு சில காட்டுயானைகள் மாலை மற்றும் இரவு நேரங்களில் வனப் பகுதியில் இருந்து வெளியேறி, அருகில் உள்ள கிராமங்களில் புகுந்து அங்கு உள்ள விளை நிலங்களை சேதப்படுத்தி வருகிறது. இதனிடையே, கோவை அருகே உள்ள நரசீபுரம் பகுதியில் கடந்த சில தினங்களாக ஒற்றை யானை சுற்றி வருகிறது. இரவு நேரத்தில், குடியிருப்பு பகுதிகளை குறி வைத்து அங்கு செல்லும் யானை வீட்டில் வைக்கப்பட்டு இருக்கும் ரேஷன் அரிசி மற்றும் மாடுகளுக்கு வைக்கப்பட்டு இருக்கும் தீவனங்களை சாப்பிட்டு வருகிறது.



இந்தநிலையில், நேற்று முன்தினம் அதிகாலை நரசீபுரம் அடுத்த வைதேகி நீர்வீழ்ச்சிக்கு செல்லக் கூடிய பகுதியில் உள்ள விவசாயி பாலு என்பவரது வீட்டின்காம்பவுண்ட் கேட்டை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றது. பின்னர், அந்த ஒற்றை யானை வீட்டின் முன்பு சாக்குப் பையில் வைத்திருந்த தவிடு மற்றும் நிலக்கடலை கொடியை சாப்பிட்டது. மேலும், வீட்டின் வாசலில் யானை நிற்பதை பார்த்த பாலுவின் உறவினர்கள் அச்சமடைந்தனர். இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் அளித்த நிலையில், வனத்துறையினர் அங்கு வந்துகொண்டிருந்தனர். அவர்கள் வந்த ஜீப் பழுதானது. உடனே அங்குள்ள பொதுமக்கள் தங்களுடைய வாகனத்தில், வனத்துறையினரை அழைத்துச் சென்று யானையை விரட்டினர்.

இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறும் போது, இரவு நேரங்களில் வனத்தில் இருந்து வெளியேறும் யானைகள், விவசாய நிலங்களில் புகுந்து சேதப்படுத்தி வந்தது. தற்போது, வீடுகளை குறி வைத்து வருகிறது. குறிப்பாக, ரேஷன் அரிசி மற்றும் மாடுகளுக்கு வைக்கப்படும் புண்ணாக்கு, தவிடுகளை சாப்பிடுவதற்காக வீட்டின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே செல்வதால், வீட்டுக்குள் குடியிருக்கவே அச்சமாக உள்ளது.எனவே, வீடுகளை நோக்கி வரும் யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வாட்ஸ்அப் வீடியோ காலில் ஆபாச படம் எடுத்து மிரட்டல்.. நண்பர்களை நம்பிய பள்ளி மாணவிகளுக்கு நேர்ந்த கதி



தர்மபுரி ஜூன் 21

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப் பட்டியை சேர்ந்த டிரைவர் சரவணன் (வயது 22). அதே பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவன் செந்தமிழ் (19). இவர்கள் இருவருக்கும் அதே பகுதியை சேர்ந்த அக்காள் தங்கைகளான பிளஸ்2 மாணவிகள் 2 பேருடன் பழக்கம் ஏற்பட்டது. முதலில் நட்பாக பேசி பழக தொடங்கிய அவர்கள் சில நாட்களில் அந்த மாணவிகளிடம் ஆபாசமாக பேசி உள்ளனர். ஒரு கட்டத்தில் அவர்கள் வாட்ஸ் அப் வீடியோ காலிலும் பேசி வந்துள்ளனர். அப்போது அந்த மாணவிகளை சரவணன், செந்தமிழ் இருவரும் நிர்வாணமாக நிற்க சொல்லி வீடியோ காலில் படம் பிடித்ததாக தெரிகிறது. பின்னர் அந்த ஆபாச படங்களை காட்டி தாங்கள் சொல்லும் இடத்துக்கு வர வேண்டும் என்றும் அவர்கள் மிரட்டியதாக கூறப்படுகிறது. இதற்கிடையே அந்த ஆபாச படங்களை சரவணன், செந்தமிழ் இருவரும் அவர்களது நண்பர் வெங்கடேஷ் (24) என்பவருக்கு அனுப்பி உள்ளனர். வெங்கடேஷ் அந்த படங்களை வாட்ஸ்அப் குழுவில் பகிர்ந்ததாக தெரிகிறது. இந்த ஆபாச படங்கள் வாட்ஸ்அப் குழுவில் பரவி வருவதை அறிந்த அந்த மாணவியின் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுதொடர்பாக மாணவிகளின் தந்தையிடம் கூறினர். இதுதொடர்பாக மாணவிகளின் தந்தை போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சரவணன், செந்தமிழ், வெங்கடேஷ் ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## டியூசன் வகுப்புக்கு சென்ற 11ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை ஆசிரியர் கைது

தஞ்சாவூர், ஜூன் 21

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகே திருநறையூர் பகுதியை சேர்ந்தவர் ரமேஷ்(வயது 56). இவர்திருவாரூர்அரசுபள்ளியில்ஆசிரியராகபணியாற்றி வருகிறார். பள்ளி முடித்து மாலை நேரங்களில் ஏழை மாணவர்களுக்கு திருநறையூரில் டியூஷன் வகுப்பு எடுத்து வந்துள்ளார். இவரது டியூசன் வகுப்பில் அதே பகுதியை சேர்ந்த 11ம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி படித்து வந்துள்ளார். இந்நிலையில், அந்த மாணவிக்கு ஆசிரியர் ரமேஷ் பாலியல் தொல்லை அளித்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அந்த மாணவி பெற்றோரிடம் கூறிய நிலையில், அவர்கள் இது பற்றி போலீசில் புகார் அளித்தனர். இந்த புகாரின் அடிப்படையில் ஆசிரியர் ரமேஷை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இன்றைய ராசி பலன்கள் (21.6.2025)

**மேஷம்**: தற்சமயம் நீங்கள் தாங்கும் இடத்தில் இருந்தால் அதைக் கவனியுங்கள். உங்கள் பலங்களை மேம்படுத்த வாய்ப்பு!

**ரிஷபம்**: நம்பிக்கை வளர்க்க பல்டிக் எளிய மாற்றங்கள் போதும். வாழ்க்கை மாற்றங்களை அறிவு மிக முக்கியம்.

**மிதுனம்**: தொழிலிலும், காதலிலும் இணைவாகக் கூட்டணி பெற்றிடும். உங்கள் மனதைப் புரியுங்கள்.

**கடகம்**: பணிக்கான அல்லது உறவுகளுக்கான அடிப்படைகளில் வாங்கிக் கொள்வது முக்கியம். வெறுமைப்பட்ட வரிசையால் தூரமாக இருக்கவும்.

**சிம்மம்**: அதிகார சவால்களை முறித்து பொறாமை தவிர்க்கவும்; பெரிய நோக்கத்துக்குப் பயணிக்கவும்.

**கன்னி**: இன்றைய நாள் இரக்கமோ முறையோ இருங்கள்; பொய்ப் பேச்சு நீக்கவும்.

**துலாம்**: பெரிய முதலீடை ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவும். பாஸ்வர்ட் செலவினங்களை ஆய்ந்த பிறகு முக்கிய முடிவு எடுக்கவும்.

**விருச்சிகம்**: எதிர்பாராத வாய்ப்புகள் வரலாம்—ஏற்றுக்கொள்ள தயார்.

**தனுசு**: நிதி/காதல் கடன்களை சீராக்க கவனம் செலுத்துங்கள். சீரான நிலையில் இறங்கும்.

**மகரம்**: பெரிய முயற்சியில் துடிப்பாய் இறங்குங்கள்—நீங்கள் நிகழ்த்தும் செயலால் மற்றவர்களும் தூண்டப்படுவர்.

**கும்பம்**: உணர்வுக்கும் அதிவாசிக்கு இடமளியுங்கள்—வலது அறிவும் உணர்வும் சேர்த்து செயல்பட வேண்டும்.

**மீனம்**: உள்மன அமைதியோடு சொற்கள் திரும்பிக்கும். உள அழுத்தத்தை தவிர்க்கவும்.

## திருப்பூரில் சட்ட விரோதமாக தங்கி இருந்த வங்கதேசத்தினர் 26 பேர் கைது

திருப்பூர்,, ஜூன் 21

திருப்பூர் மாவட்டத்தில் சட்ட விரோதமாகவும், உரிய ஆவணங்கள் இன்றியும் தங்கி இருக்கும் வெளிநாட்டினரை போலீசார் கைது செய்து வருகிறார்கள். மேலும் பலர் போலி ஆதார் அடையாள அட்டைகளை பயன்படுத்தி சட்டவிரோதமாக தங்கி பல்வேறு பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வருவதாககூறப்படுகிறது. இதையடுத்து கியூ பிரிவு போலீசார் மற்றும் சிறப்பு தனிப்படை போலீசார் மாவட்டம் முழுவதும் சோதனையில் ஈடுபட்டு வந்தனர்.



இந்தநிலையில் பல்லடம் அருகே உள்ளஆர். எம்.நகர், டி.கே.டி.மில், குன்னாங்கல்பாளையம் பகுதிகளில் சட்டவிரோதமாக வங்கதேசத்தினர் தங்கியிருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று அதிகாலை முதல் அந்தப் பகுதிகளில் போலீசார் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

அப்போதுஅங்குபோலி அடையாளஅட்டைகளை பயன்படுத்தி வங்க தேசத்தினர் 26 பேர் அங்குள்ள நிறுவனத்தில் தங்கி பணி புரிந்தது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்து பல்லடம் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வங்க தேசத்தினர் கைது செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அஜித் அண்ணாதான் எனக்கு இன்ஸ்பிரேஷன் நடிகர் மஹத்



பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரபலமானவர் நடிகர் மஹத். இவர் மங்காத்தா, ஜில்லா, சென்னை 600028 2, மாநாடு உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். படங்களில் தனது தனித்துவமான கதாபாத்திரங்களால் ரசிகர்களைக் கவர்ந்தவர் நடிகர் மஹத் ராகவேந்திரா. தனது பிசிக்கல் டிரான்ஸ்பர்மேஷனுக்காக தற்போது பாக்ஸிங் கற்றுள்ளார். இவர் கடந்த ஒரு வருடமாக இந்தியாவில் பாக்ஸிங் பயிற்சி பெற்று வந்தார். இதைத் தொடர்ந்து மூன்று மாதங்கள் ஆஸ்திரேலியாவில் பாக்ஸிங் பயிற்சி பெற்றார். இந்த வருடம் ஆஸ்திரேலிய சூப்பர் வெல்டர்வெயிட் குத்துச்சண்டை சாம்பியனான கோயன் மசூடியரிடம் பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைத்ததுதான் நடிகர் மஹத் குத்துச்சண்டை பயணத்தின் சிறப்பம்சம். இந்த அனுபவத்தை "சக்தி, வேகம், கவனம், சமநிலை மற்றும் திறமை ஆகியவற்றின் நம்பமுடியாத பயணம். இதில் பல சவால்கள் இருந்தாலும் அதை சமாளித்து பயிற்சி பெற்றேன். இது பிட்னஸ் தொடர்புடையது மட்டுமல்ல, ஒரு போராளியின் மனநிலையையும் எனக்குள் உருவாக்கியது" என்று நடிகர் மஹத் கூறினார். மேலும் கோயனுடன் பயிற்சி பெற்றது பற்றி விவரிக்கும்போது, "கோயனிடம் பயிற்சி பெற்றது சிறந்த அனுபவம். பாக்ஸிங் அரங்கமோ அல்லது கேமராவுக்கு முன்பு என்றாலுமே சரி வெற்றிபெற தேவையான கவனம், உத்தி மற்றும் மன ஒருமைப்பாடு பற்றிய ஆழமான புரிதலை எனக்கு அளித்தது" என்றார்.

இந்தப் புதிய அத்தியாயத்தின் மூலம் மஹத் தனது தனிப்பட்ட வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு, உடல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் தன்னை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்து செல்வதையும் இதன் மூலம் உறுதி செய்துள்ளார். "நடிகர்கள் தங்களுக்கான ஸ்டிரீயோ டைப்பை உடைக்க வேண்டும் என்பதை கார் ரேஸ் சாதனைகள் மூலம் எனக்கு அஜித் அண்ணாதான் புரிய வைத்தார். நான் விரும்பும் போட்டி விளையாட்டுகளில் பங்கேற்கவும், என் திறமையை நிரூபிக்கவும் இனிவரும் காலங்களில் விரும்புகிறேன். அடுத்தடுத்து எனது படங்களிலும் திறமையை மேம்படுத்தவும் இது உதவும்" என்றார்.

## ஜன நாயகன் படத்தின் அப்டேட்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் தற்போது எச். வினோத் இயக்கத்தில் 'ஜனநாயகன்' படத்தில் நடித்து வருகிறார். இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி 9ம் தேதி உலகளவில் வெளியாக உள்ளது. 'ஜனநாயகன்' படத்திற்கு பிறகு முழு நேர அரசியலில் விஜய் ஈடுபட உள்ளார்.

இது விஜய்யின் கடைசி படம் என்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. இந்த படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். வில்லனாக பாபி டியோல் நடிக்கிறார். இவர்களுடன் சேர்ந்து முக்கிய கதாப்பாத்திரங்களில் நரேன், மமிதா பைஜு, பிரியாமணி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

இந்த நிலையில், 'ஜனநாயகன்' படத்தின் அப்டேட் இன்று மாலை 6 மணிக்கு வெளியாகும் என படக்குழு சூசகமாக தகவல் தெரிவித்துள்ளது.

## "பறந்து போ" படத்தின் 'கஷ்டம் வந்தா' பாடல் ரிலீஸ் அப்டேட்




எதார்த்தமான படங்களை இயக்கி ரசிகர்கள் மனதை வென்றவர் இயக்குனர் ராம் . "கற்றது தமிழ், தங்க மீன்கள், பேரன்பு, தரமணி" உள்ளிட்ட வெற்றி படங்களை இயக்கியுள்ள இவர் தற்போது 'பறந்து போ' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

மிர்ச்சி சிவா கதாநாயகனாக நடித்துள்ள இப்படத்தில் அஞ்சலி, கிரேஸ் ஆண்டனி, அஜு வர்கீஸ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். சந்தோஷ் தயாநிதி இசையமைத்துள்ள இப்படத்திற்கு யுவன் பின்னணி இசையமைத்துள்ளார்.

பிடிவாதமான பள்ளி சிறுவனும் பணத்தின் மீது அதிக மோகம் கொண்ட அவனது தந்தையும் நகர வாழ்க்கையிலிருந்து விலகி மேற்கொள்ளும் பயணம் குறித்த 'ரோட் டிராமா'வாக இந்த திரைப்படம் உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இப்படம் வருகிற ஜூலை மாதம் 4ம் தேதி வெளியாக உள்ளது.

'பறந்து போ' படத்தின் 'டாடி ரொம்ப பாவம்' பாடல் வெளியாகி வைரலானது. இப்பாடலை நடிகர் சித்தார்த் பாடியுள்ளார். பாடல் வரிகளை மதன் கார்க்கி எழுதியுள்ளார். நடிகர் சூரி 'டாடி ரொம்ப பாவம்' பாடலை பாராட்டியுள்ளார்.

இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான 'கஷ்டம் வந்தா' பாடல் வரும் ஜூன் 24ம் தேதி வெளியாக உள்ளதாகபடக்குழுஅறிவித்துள்ளது. இப்பாடலையுவன்ஷங்கர்ராஜாபாடியுள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன சாய் சுதர்சன்.. ஹார்திக் கொடுத்த ரியாக்சன்.. வைரல்



இந்தியாஇங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி லீட்சில் இன்று தொடங்கியது. இந்த போட்டிக்கான டாசில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பென்ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வால் கே.எல்.ராகுல் களமிறங்கி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த போட்டிக்கான இந்திய அணியில் தமிழக வீரரான சாய் சுதர்சன் அறிமுக வீரராக இடம்பெற்றுள்ளார். இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் ஆன 317 வது வீரர் சாய் சுதர்சன் ஆவார். அத்துடன் அவர் 3வது வரிசையில் பேட்டிங் செய்ய உள்ளதாக கேப்டன் சுப்மன் கில் அறிவித்துள்ளார். இந்நிலையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன சாய் சுதர்சனுக்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில் இந்திய வீரரான ஹார்திக் பாண்ட்யா, "நீ இதற்கு தகுதியானவன், சாய். நன்றாக செல்" என்று வாழ்த்தி பதிவிட்டுள்ளார். இது வைரலாகி வருகிறது.

## அகமதாபாத் விமான விபத்து: கருப்பு பட்டை அணிந்து விளையாடும் இந்தியா, இங்கிலாந்து வீரர்கள்



குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து இங்கிலாந்தின் லண்டன் நகருக்கு ஏர் இந்தியா விமானம் ஒன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு புறப்பட்டு சென்றது. அது பறக்க தொடங்கிய சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து தீப்பற்றி எரிந்து உருக்குலைந்தது. இந்த விபத்தில், விமானத்தில் பயணித்தவர்கள் உள்பட 240க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலையில், அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இன்று நடைபெற்று வரும் இந்தியா இங்கிலாந்து இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் இரு அணி வீரர்களும் கையில் கருப்பு பட்டை அணிந்து விளையாடி வருகின்றனர்.

## இங்கிலாந்தில் வெறும் 33 சராசரியை கொண்ட அவரை இந்தியா மிஸ் செய்யாது மைக்கேல் வாகன் கிண்டல்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி இந்தியா முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

இந்த தொடருக்கு இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா, நட்சத்திர வீரர் விராட் கோலி ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஒரு வார இடைவெளியில் அடுத்தடுத்து ஓய்வு பெற்றனர். விரைவில் இந்த டெஸ்ட் தொடர் தொடங்க இருந்த நிலையில் இவர்களின் விலகல் இந்திய கிரிக்கெட் அரங்கை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

முன்னதாக பார்டர் கவாஸ்கர் கோப்பை மற்றும் நியூசிலாந்து தொடர்களில் விராட் மற்றும் ரோகித் சொதப்பியதால் அவர்களை அணியிலிருந்து நீக்க தேர்வுக்குழு மற்றும் தலைமை பயிற்சியாளர் கம்பீர் முடிவெடுத்ததாக தகவல்கள் வெளியாகின. ஆனால் அதற்கு முன்னதாக இருவரும் தாங்களாகவே ஓய்வை அறிவித்து விட்டனர்.

இவர்களில் விராட் கோலியை இந்திய அணி அதிகம் தவறவிடும் என்று பலர் கூறினர். ஏனெனில் களத்தில் ஆக்ரோஷம் மற்றும் பேட்டிங்கில் அசத்திய அவர் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரர்களில் ஒருவராக போற்றப்பட்டார். அவர் இல்லாமல் இந்திய அணி இங்கிலாந்தில் வெற்றி பெறுவது கடினம் என்று பல முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்தில் வெறும் 33 என்ற சராசரியை மட்டுமே கொண்டுள்ள விராட் கோலியை இந்திய அணி மிஸ் செய்யாது என்று அந்நாட்டின் முன்னாள் வீரரான மைக்கேல் வாகன் கிண்டலடித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இந்திய அணியை சுற்றி கலாச்சாரத்தை உருவாக்கிய விராட் கோலி ஒரு ஜாம்பவான். ஒரு கேப்டனாக அவர் அணிக்குள் கொண்டு வந்த ஆற்றல், உந்துதல் மற்றும் ஆக்ரோஷம் இன்னும் உள்ளது. ஆனால் இங்கிலாந்தில் அவர் சராசரியாக 33 ரன்கள் மட்டுமே எடுத்தார். சராசரியாக 33 ரன்கள் எடுக்கும் ஒருவரை நீங்கள் பெரிதாக தவற விட மாட்டீர்கள்;

ஆனால் ஓய்வறையில் இவ்வளவு கொண்டு வந்த ஒருவரை நீங்கள் மிஸ் செய்வீர்கள். தற்போது இந்தியாவுக்காக விளையாட வந்துள்ள இந்த வீரர்கள் உண்மையிலேயே திறமையானவர்கள்தான். ஒருவேளை இந்த புதிய தலைமுறை வீரர்கள் காத்திருந்திருக்கலாம். அவர்கள் சிறப்பாக விளையாடினால் ஆச்சரியப்பட வேண்டாம்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.